ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதிவிசேஷமானது

අංක 2255/9 - 2021 නොවැම්බර් මස 23 වැනි අඟහරුවාදා - 2021.11.23
*2255/9 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 23 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

***(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ (1)(அ) ஆம் பிரிவின் கீழ் தவலம பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்***

தவலம பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவி, இறப்பெய்தியமை காரணமாக வெற்றிடமாகியிருக்கின்றதாதலாலும்;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ (1) (அ) என்னும் பிரிவின் கீழ் இலக்கம் 04- ஹினிதும வட்டாரத்திற்கு தெரிவு செய்யப்பட்ட சமரசிங்ஹகே ஜயந்த என்பவர் அங்கம் வகிக்கின்ற, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுண என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயாம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான தவலம பிரதேச சபையின் இலக்கம் 04 - ஹினிதும வட்டாரத்தின் உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக எதிரிசிங்ஹ விஜேவர்தன ஆரச்சிகே சந்திரதாஸ என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும்;

தவலம பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலரான வேவெல்வல ஹேவகே ரவீந்திர விஜய குமார ஆகிய நான் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262ஆம் அத்தியாயமான) 66அ (1)(அ) ஆம் பிரிவின் நியதிகளின் படி செயற்பட்டு எதிரிசிங்ஹ விஜேவர்தன ஆரச்சிகே சந்திரதாஸ என்பவர் தவலம பிரதேச சபையின் இலக்கம் 04- ஹினிதும

1A – G35407 –30(2021/11)
*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

வட்டாரத்தின் உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**டபிள்யூ. எச். ஆர். விஜய குமார,**
தெரிவத்தாட்சி அலுவலர்,
தவலம பிரதேச சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
காலி,
*2021, நவெம்பர் 22.*

*12-36*

---

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ (1) (அ) ஆம் பிரிவின் கீழ் ஆரச்சிகட்டுவ பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

ஆரச்சிகட்டுவ பிரதேச சபையின் தெரிந்தெடுத்து அனுப்பப்பட்டுள்ள உறுப்பினர் ஒருவரின் பதவி, கட்சியின் உறுப்புரிமையை இல்லாதொழிந்தமை காரணமாக வெற்றிடமாகியிருக்கின்றதாதலாலும்;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ (1) (அ) என்னும் பிரிவின் கீழ், ஆரச்சிகட்டுவ பிரதேச சபையின் இலக்கம் 9 கருக்குபனை வட்டாரத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட வர்ணகுலசூரிய சுஜித் பர்னாந்து என்பவர் அங்கம் வகிக்கின்ற ஐக்கிய தேசியக் கட்சி என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 09 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான ஆரச்சிகட்டுவ பிரதேச சபையின் இலக்கம் 09 கருக்குபனை வட்டாரத்தின் உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக திசாநாயக்க முதியன்சேலாகே சமில் இந்திக்க என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும்;

ஆரச்சிகட்டுவ பிரதேச சபையினன் தெரிவத்தாட்சி அலுவலரான பாதன முதியன்சேலாகே இந்துனில் சஞ்ஜீவ லசந்த பண்டார ஆகிய நான் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262ஆம் அத்தியாயமான) 66அ (1) (அ) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு திசாநாயக்க முதியன்சேலாகே சமில் இந்திக்க என்பவர் ஆரச்சிகட்டுவ பிரதேச சபையின் இலக்கம் 09 கருக்குபனை வட்டாரத்தின் உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**பி. எம். ஐ. எஸ். எல். பண்டார,**
தெரிவத்தாட்சி அலுவலர்,
ஆரச்சிகட்டுவ பிரதேச சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
புத்தளம்,
*2021, நவெம்பர் 19.*

*12-37*

---

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.